2001 செப்டம்பர் 8]

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நகராகத் திகழ்கின்ற திருப்பூர் நகரிலுள்ள அரசு மருத்துவமனைக்கு—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுந்தரம், உடுமலைப்பேட்டையா?

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான கேள்விதான். பல அரசு மருத்துவமனைகளில் மயக்க மருந்து கொடுக்கின்ற டாக்டர்கள், அதாவது Anaesthetist என்ற.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு அமைச்சரிடம் பதில் இருக்காது.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எல்லாக் கேள்விகளுக்கும் விளக்கமாக பதில் சொல்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சொல்ல முடியும் என்றாலும்கூட, அமைச்சரிடம் தலைக்கள்ஞ்சியம் ஒன்றும் இருக்காது. உடுமலைப்பேட்டையைப் பற்றிக் கேட்டால்தான் சொல்ல முடியும். திரு. சுந்தரம், உட்காருங்கள். தனிக் கேள்வியாகக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை போன்ற மருத்துவமனைகளிலே மருந்தாளுநர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்ன போன்ற? சரியாக வராது.

திரு. சி. ஞானசேகரன்: ஒரே ஒரு நிமிடம். அந்தக் கேள்விதான்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. டி. மணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

63—

குடிநீர்

***398—திரு. டி. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 செப்டம்பர் 8

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கடையல் கிராமம், வலிய ஏலா பகுதியில் குடியிருக்கும் விவசாய மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வலிய ஏலா பகுதியானது கடையல் பேரூராட்சியின் உட்கிடை குடியிருப்பு ஆகும். இப்பேரூராட்சியின் தற்போதைய மக்கள்தொகை 23,000 ஆகும். கடையல் பேரூராட்சி முழுமைக்கும் குடிநீர்த் திட்டம் நிறுவிட கோதை ஆற்றில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட இரண்டு நீர் உறிஞ்சு கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு, ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வுப் பணிகள் முடிவடைந்ததும், விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதல் பெற்று, திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று பேரவைக்குத் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

திரு. டி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வலிய ஏலாவிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேண்டும் என்பது – ஏற்கெனவே கடையல் பேரூராட்சியிலே ஒரு குடிநீர்த் திட்டம் செயல்படுகிறது. ஆனால், அங்கிருந்து இங்கே தண்ணீரைக் கொண்டுவர வேண்டுமென்றால் 6 அல்லது 7 கிலோமீட்டர் இருக்கும். அதற்கு அருகில் கோதையாற்றினுடைய ஒரு கிளை செல்கிறது. அதிலே ஏதாவது check dam கட்டி அந்தத் தண்ணீரை எடுத்து, சுத்தம் செய்து, filter செய்து அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுப்பதற்கான புதிய ஒரு திட்டத்தை வகுத்து அதன் மூலமாக அதைச் செய்ய முடியுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஏனென்றால் அந்தப் பழைய திட்டத்திலே, இப்போது செயல்படுகின்ற திட்டத்திலே, ஏற்கெனவே ஆற்றுக்குள்ளே போட்டிருக்கின்ற கிணறுகளில் ஒரு கிணறு சரிந்துவிட்டது, ஒரு கிணற்றிலே சுத்தமான தண்ணீர் இல்லை. எனவேதான் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வகுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: அரசு பரிசீலிக்கும் என்பதை பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2001 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 64, திரு. எஸ். தாமோதரன், திரு. வ.து. நடராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

64–

பனை மரத் தொழிலாளர் வாரியம்

***586–திரு. எஸ். தாமோதரன்:**
திரு. வ.து. நடராஜன்:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) பனை மரம் ஏறும் பல இலட்சம் தொழிலாளர்கள் நலன் காக்க பனை மரத் தொழிலாளர் வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசாணை நிலை எண் 166, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 18–10–2000–ல் தமிழ்நாடு பனை மரத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) 18 வயது நிரம்பிய மற்றும் 60 வயதுக்குட்பட்ட பனை மரம் ஏறும் மற்றும் பதநீர் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்கள் இந்த வாரியத்தில் ரூ.100/– செலுத்தி பதிவுசெய்து கொள்ளலாம். பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ரூ.10/– செலுத்தி பதிவினைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பனை ஏறுகின்ற தொழிலாளர்களுக்கு வாரியம் அமைக்க வேண்டுமென்று கடந்த ஆட்சியிலே கேட்டபோது, பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவொன்று என்று சேர்த்து மொத்தமாக வாரியம் அமைத்து விட்டார்கள். ஆனால் நாங்கள் கேட்டது, கேட்பது, பனை ஏறும் தொழிலாளர்களுக்குத் தனி வாரியம். பனை ஏறுகின்ற தொழிலாளர்கள் ஆந்திராவில் ஒரு பனைக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.10 செலுத்தி பதநீர்